# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 120/2024
## PW1

Name : பெரியசாமி

Father's/Husband's Name : முத்து

Village :

Taluk/District :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.06.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் மேல்குண்ணுமுறிஞ்சி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . நான் டீ கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் பா.ம.க கட்சியில் இருக்கிறேன். அவரும் எங்கள் கட்சியை சேர்ந்தவர் என்ற வகையில் அவரைஎனக்கு தெரியும். கடந்த 25.09.2023 அன்று டீக்கலூர் கிராமத்தில் உறவினர் இறப்பிற்காக சென்றிருந்தேன். அப்போது ஆர்ப்பாககம் கூட்ரோடில் நான் வண்டியில் சென்றபோது எதிரி என்னை பார்த்து தெவிடியா பையா என்று சொல்லி திட்டினார் . பின்னர் நான் என்ன என்று கேட்டபோது கையில் ஒரு பாராங்கல் வைத்து என் முன்னந்தலையில் இடது பக்கத்தில் அடித்துவிட்டார். வண்டியில் இருந்து ஒரு பாட்டா கத்தியை எடுத்து என் இடது பக்க விலாவிற்கு கீழ் குத்தினார். என்னை தடுக்கவந்த சாரங்கபாணி என்பவரையும் வயிற்றில் பட்டா கத்தியால் கிழித்து விட்டார். அவர் வயிற்றின் இடது பக்கத்திலும் கிழித்துவிட்டார் . நான் சாவுக்கு சென்ற இடத்தில் இருந்து என்னையும் , சாரங்கபாணியையும் உறவினர்கள் வந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள் . சுந்தர்சாமி என்பவரும் எங்களுடன் மருத்துவமனைக்கு வந்தார் . நான் மருத்துவமனையில் இருந்தபோது மங்களம் காவல் நிலைய போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் . நான் நடந்ததை சொன்னேன். நான் சொன்னதை வாக்குமூலமாக பதிவு செய்துகொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அந்த புகார் வாக்குமூலம் . அது அ.சா.ஆ 1. எதிரி பயன்படுத்திய கத்தியை காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில்

காண்பிக்கப்படும் கத்திதான் எதிரி என்னை தாக்க பயன்படுத்திய கத்தி ., அது அ.சா.பொ.1. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை</u>**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.